நாள்.08.02.2023

**அசல் வழக்கு எண். 9/2018**

<u>வா.சா.1 - முதல் விசாரணை தொடர்ச்சி</u>

23.08.1990 வாதிக்கு, பாத்திமா அம்மாள் எழுதிக்கொடுத்த இனாம் அபிடவிட் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 05.06.1988 ல் S.M.S.சேக் ஜலாலுதின் மரக்காயர் மக்கள் செய்துக்கொண்ட பாகப்பரிவினை பத்திரம் தாக்கல் செய்கிறேன். 06.12.2017 ல் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.3/2010 ன் திருத்தப்பட்ட வழக்குரையின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். 01.07.1955 ல் பிரதிவாதி முன் பாத்தியஸ்தர் ஜிமுன்னிசா பேகம் பெற்ற கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 03.04.1977 ல் முகமது சுல்தான் மரைக்காயருக்கு ஜிமுன்னிசா பேகம் எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 25.02.2010 ல் 3,4 பிரதிவாதிகளுக்கு முகமது சுலதான் எழுதிக்கொடுத்த இனாம் சாசனம் சான்றிட்ட நகல் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் பெறப்பட்டது அது **வா.சா.ஆ.4** ஆகும். 25.02.2010 ல் 2-ம் பிரதிவாதிக்கு முகமது சுல்தான் எழுதிக்கொடுத்த இனாம் சாசனம் சான்றிட்ட நகல் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் பெறப்பட்டது அது **வா.சா.ஆ.5** ஆகும். தாவா சொத்தி இயற்கை அமைப்பை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் அது **நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.